<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**</u>

<u>**CC.No. 07/2020**</u>

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் நாள் வெள்ளி கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.திருஞானம் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு/கோவிந்தராஜ். மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.திருஞானம் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | சாமிக்கண்ணு | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW2 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் அணைக்குடம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அசா1ஐ தெரியும். அவர் எனது மனைவி ஆவார். கடந்த 24.06.2019ம் தேதிக்கு முதல்நாள் ஆர்.எஸ்.பதி மரம் எறிந்தது பற்றி நானும் என் மனைவியும் பேசிக்கொண்டிருந்தோம். மறுநாள் 07.30 மணியளவில், நான் வீட்டிலிருந்தபோது, மாட்டுக் கொட்டகையில் எனது மனைவி மாடு அவிழ்த்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி ஆர். எஸ்பதி எறிந்தது, எப்படி எங்களை நீ பேசலாம் என்று சொல்லி, நார புண்ட குச்சிகாரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன்டி என்று திட்டி, ஒரு அடி கட்டையால் அடித்தார். எனது மனைவிக்கு தலையில் அடிபட்டது. நான் என் மனைவியை அடிக்காதீர்கள் என்று தடுத்தபோது, என்னையும் கட்டையால் இரண்டு கால்களிலும் எதிரி அடித்தார். என் மனைவிக்கு தலையிலிருந்து இரத்தம் வந்ததால், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு வந்து போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டுத்தான் போனேன். சம்பவம் நடந்தபோது, எதிரி என்னை இரண்டு கால்களிலும் கட்டை கழியால் அடித்தார் என்று சொல்வது வழக்கிற்காக

சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எதிரி என்னை இரண்டு கால்களிலும் கட்டை கழியால் அடித்திருந்தால் நான் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை எடுத்திருப்பேன் என்று சொன்னால் நான் சிகிச்சை எடுத்தேன். எதிரி என்னை அடிக்கவும்இல்லை, அதனால்தான் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்திருப்பீர்கள் என்று சொன்னால் எதிரி அடித்தார், நான் சிகிச்சை எடுத்தேன். நான் சிகிச்சை எடுத்திருந்தால், அதற்கான மருத்துவ சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், சிகிச்சை எடுத்தேன் என்று சொல்வது வழக்கிற்காக சொல்வது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையின்போது, வேறு எதையும் மாற்றி சொல்லவில்லை. போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்றே அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். அதன்பிறகு வந்து என்னை விசாரிக்கவில்லை. எதிரியால் என் மனைவிக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் மனைவியை அடித்து காயப்படுத்தியிருந்தால், நான் நடந்த சம்பவத்தை நடந்தமாதிரியே சொல்லியிருப்பேன் என்றும், எதிரியால் எந்த குற்ற சம்பவமும் நடக்கவில்லை என்பதால்தான் போலீசார் விசாரணையின்போது ஒருவிதமாகவும், மருத்துவரிடம் ஒருவிதமாகவும், முதல் விசாரணையில் ஒரு விதமாகவும் மாற்றி மாற்றி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் உள்ள சொத்து பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, என் மனைவி மூலம் பொய் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன என்று சொன்னால் சரியல்ல. நான் சிவசங்கரன் என்பவரிடம் என்னுடைய சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு எதிரி பெயரில்தான் பட்டா உள்ளதுஎன்றால் முழுவதும் இல்லை பாதிதான் உள்ளது.அந்த பாதி சொத்தின்பொருட்டு எதிரிக்கும் எனக்கும் நீண்ட நாட்களாக பிரச்சனை இருந்துவருகிறது என்றும், அந்த பிரச்சனையால்தான் என் மனைவியை தூண்டிவிட்டு, எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியால் எந்த குற்ற சம்பவமும் நடக்கவில்லை என்றும்,இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/–இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.